# உண்மை வெளிவரும்போது நிச்சயம் உரிய நடவடிக்கை!

## கரூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி! முதல் பக்கத் தொடர்ச்சி

அதன் பிறகு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களையும் தொடர்புகொண்டு நான் கேட்டபோது அவரும் சில தகவல்களை கூறினார். அடுத்த 5 நிமிடங்களில் மருத்துவமனைக்கு முதலில் 4, 5 பேர் கொண்டு வரப் பட்டார்கள் என்ற செய்தி வந்தது. பிறகு போகப்போக அதிகமான நபர்களை கொண்டு செல்கிறார்கள் என்று சொன்னார்கள்.

அதனைத் தொடர்ந்து, மரண செய்திகள் வர ஆரம்பித்து விட்டது. நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. உடனடியாக நான் இந்த மாவட்டத்தின் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் அமைச்சர் பெருமக்களை தொடர்பு கொண்டேன். அதன் அடிப்படையில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை உடனடியாக கரூர் செல்லும்படி உத்தரவிட்டேன். பிறகு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களை அழைத்து உடனடியாக அங்கு சென்று பாருங்கள் என்று அவரையும் அனுப்பி வைத்தேன்.

பிறகு டி.ஜி.பி., சட்டம் ஒழுங்கு ADGP மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளையெல்லாம் தொடர்புகொண்டு உடனடியாக போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டு அவர்களையும் அனுப்பி வைத்தேன்.

அந்த செய்திகள் எல்லாம் என் மனதை கலங்கடித்தது. அதற்கு பிறகு உடனடியாக நம்முடைய மூத்த அமைச்சர்கள் துரைமுருகன் அவர்கள், நேரு அவர்கள், வேலு அவர்கள் ஆகிய அனைவரையும் அழைத்துக் கொண்டு தலைமைச் செயலகத்திற்கு சென்றேன். DGP மற்றும் உயர் அலுவலர்களையும் கலந்தாலோசித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம்? எப்படி மீட்பு பணிகள் நடந்து கொண்டிருக்கிறது என்ற விபரங்களை எல்லாம் கேட்டேன்.

பல்வேறு மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள், கரூர் அருகில் உள்ள மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், மருத்துவர்கள் உடனடியாக கரூருக்கு செல்லும்படி உத்தரவிட்டதன் அடிப்படையில், கரூருக்கு வந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**தீவிரச் சிகிச்சைப் பிரிவில் 51 பேர்!**

பெருந்துயரமான இந்த சம்பவத்தில் மொத்தம் 39 உயிர்கள் இதுவரை நாம் இழந்திருக்கிறோம். இதில் ஆண்கள் 13 பேர், பெண்கள் 17 பேர், ஆண் குழந்தைகள் 4 பேர், பெண் குழந்தைகள் 5 பேர்.

ஒரு அரசியல் கட்சி நடத்திய கூட்டத்தில் இத்தனை பேர் உயிரிழந்த துயரமான சம்பவம் என்பது இதுவரை நடக்காதது - இனிமேலும் நடக்கக்கூடாது. மேலும், 51 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று கொண்டிருக்கிறார்கள். அதில் 26 பேர் ஆண்கள், 25 பேர் பெண்கள்.

**காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சம்!**

இவர்கள் எல்லோரும் நலமடைந்து விரைவில் மீண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இறந்த உயிர்களுக்கெல்லாம் கனத்த இதயத்தோடு நான் அஞ்சலி செலுத்துகிறேன். அவர்கள் குடும்பத்திற்கு என்ன ஆறுதல் சொல்லி தேற்றுவது என்று தெரியவில்லை. இந்த துயரமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை உடனடியாக அமைப்பதற்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு இன்று காலை கரூர் வரலாம் என்றிருந்தேன். இந்த கொடூரமான காட்சிகளை எல்லாம் தொலைக்காட்சியில் பார்த்தபோது எனக்கு மனது கேட்கவில்லை. வீட்டில் இருக்கவே என்னால் முடியவில்லை. அதனால்தான் முன்கூட்டியே வரவேண்டும் என்று நேற்று (28.9.2025) அதிகாலை, 1 மணியளவில் இங்கு வந்திருக்கிறேன்.

மரணமடைந்திருக்கக்கூடிய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் மீண்டும் என்னுடைய ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்றும் விழைகிறேன்.

**கேள்வி** - முதற்கட்ட விசாரணை குறித்து...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் - ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையம் அறிக்கை அளித்த பிறகு முழுமையாக சொல்கிறோம். இதற்கிடையில், அரசியல் நோக்கத்தோடு நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், ஆணையம் அதற்காகதான் அமைத்திருக்கிறோம். அந்த ஆணையத்தின் மூலமாக உண்மை வெளிவரும். அந்த உண்மை வெளிவரும்போது நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.**

பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**“இரவு முழுவதும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் சிந்திய கண்ணீரும், அவர்களது துக்கம் நிறைந்த அழுகுரல் ஏற்படுத்திய வலியும் என் நெஞ்சத்திலிருந்து அகலவில்லை...”** என்று குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி சுதா, செல்வி ஜோதிமணி, ராபர்ட் புரூஸ், விஜய் வசந்த், கோபிநாத், விஷ்ணுபிரசாத் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2025 தொடங்கி வைத்து, வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் என பல்வேறு அமைப்புகளை காட்சிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (27.9.2025), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் புதுச்சேரி மற்றும் புதுச்சேரி – காரைக்கால் மாநில தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை பணியினை ஒருங்கிணைத்துச் செயலாற்ற, தலைமைக் கழகத்தால் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்கன் எம்.பி., நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.9.2025) சென்னை, தரமணி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, எம்.எஸ்.சுவாமிநாதன் மற்றும் மீனா சுவாமிநாதன் ஆகியோரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன், தலைமை அஞ்சல் துறைத் தலைவர் திருமதி மரியம்மா தாமஸ், ‘தி இந்து’ குழுமத்தின் இயக்குநர் என்.ராம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தலைமைக் கழக அறிவிப்பு!

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, நேற்று (28-09-2025) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டன.

**- தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஜவஹர்லால்நேரு உள்விளையாட்டு அரங்கில் கல்வியில் சிறந்த தமிழ்நாடு, தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் நிகழ்ச்சியில் 2025 – 26 ஆம் கல்வி ஆண்டிற்கான புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டங்களை தொடங்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் இத்திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டையினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாஜலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் முதல்வர் (சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி) திருக்குமரன், மாவட்ட சமூகநல அலுவலர் சண்முகவடிவு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வில்லிவாக்கத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

*சென்னை, செப். 29 -*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 220 வது நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 220 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (27.09.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 96, போர்ச்சியல் ரோடு, 2) வட்டம் 98ஆ, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*